தமிழ்நாட்டு கிராமப்புற மாணவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தும் 'TEALS' திட்டம்!

'மைக்ரோ சாஃப்ட்' நிறுவனத்துடன் - தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை ஒப்பந்தம்!

அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலையில்!

வாஷிங்டன், ஜூலை 8 -

தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்களுக்கு அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த புரிதலும் சென்றடைய தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் 'TEALS' திட்டத்தின்கீழ் - இந்தியாவிலேயே முதன்முறையாக கல்வி மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை, உலகப் புகழ் வாய்ந்த 'மைக்ரோ சாஃப்ட்' நிறுவனத்துடன் மேற்கொண்டுள்ளது.

தமது (பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்) முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் குறித்து அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி இந்தியாவிலேயே முதன்முறையாக கல்வி மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை மேற்கொண்டுள்ளது.

TEALS(Tecnical Education And Learning Support) எனும் திட்டத்தை செயல்படுத்தும் நோக்கில் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. தமிழ் நாட்டின் கிராம பகுதிகளைச் சேர்ந்த மாணவச் செல்வங்களுக்கு அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த புரிதலும் சென்றடைய TEALS திட்டம் செயல்படுத்தப்படும்.

முதலமைச்சர் அவர்கள் வானவில் மன்றம் திட்டத்தின் வாயிலாக STEM முயற்சியை தொடங்கி வைத்தார்கள். மாணவர்களின் கண்டுபிடிப்பு திறனை ஊக்குவிக்கும் விதமாக 710 கருத்தாளர்களின் உதவியோடு மாணவர்களின் அறிவியல் திறன்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடுத்த கட்டமாக Robotics, Artificial Intelligence, Machine learning போன்ற தொழில்நுட்பங்கள் நமது கிராமப்புற மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும் எனும் நோக்கில் மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து வரலாற்று சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

TEALS எனும் திட்டத்தை மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் இணைந்து தங்கள் மாநிலங்களில் செயல்படுத்த வேண்டுமென இந்தியாவில் உள்ள பல மாநிலங்களும் போட்டியிட்டன! ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தந்த ஆக்கத்தினாலும், ஊக்கத்தினாலும் தமிழ்நாடு மாநிலம் முதன்முறையாக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

நவீன தமிழ்நாட்டின் தந்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் இதுபோன்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது தமிழர்களாகிய நமக்கு கிடைத்த பெருமையாகும்.

முதல்கட்டமாக 13 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 3800 மாணவர்கள் பயன்பெறும் வகையில் TEALS திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

மிக விரைவில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மைக்ரோசாப்ட் இயக்குனர்கள் பங்கு பெறும் TEALS திட்டத் தொடக்க விழா தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கின்றது. இத்திட்டம் அனைவராலும் பாராட்டப்படும் என மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

இதற்கு உறுதுணையாக விளங்கிய மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான சிசில் சுந்தர்((Director Data & AI), தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை முதன்மை செயலாளர் திருமதி.காகர்லா உஷா சுதன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள்.

இவ்வாறு, தமது அறிக்கையில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில், தமிழ்நாடு அரசின் சார்பில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்று, அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மோடி கையெழுத்திட்ட - சென்னை காட்டுப்பள்ளியில் அமெரிக்கக் கடற்படை கப்பல் பழுதுபார்ப்பு ஒப்பந்தம்!

புவிசார் அரசியலில் - தமிழ்நாடு மையப்புள்ளியாக மாறும் ஆபத்து!

'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 7 -

அண்மையில் அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி அமெரிக்க அரசுடன் கையெழுத்துப் போட்ட பல ஒப்பந்தங்களுள் ஒன்றான அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் சென்னை-காட்டுப்பள்ளியில் பழுது பார்ப்பதற்கான ஒப்பந்தத்தின் மூலம் புவிசார் அரசியலில் தமிழ்நாடு ஒரு மையப்புள்ளியாக மாறும் ஆபத்தை உருவாக்கும் என 'தீக்கதிர்' நாளேடு 6.7.2023 அன்று தலையங்கத்தில் எச்சரித்துள்ளது.

அத்தலையங்க விவரம் வருமாறு:-

இந்தியாவின் பாதுகாப்பைக் காவு கொடுக்கும் வகையில் மோடி அரசு அமெரிக்கா வுடன் பல ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது. அதில் ஒன்று சென்னையை அமெரிக்காவின் ராணுவத் தளமாகப் பயன்படுத்தும் ஆபத்தை உள்ளடக்கி யிருக்கிறது. இதனை அனைத்து ஜனநாயக இயக்கங்களும் இணைந்து எதிர்த்திட வேண்டும்.



தீக்கதிர்

2023 ஜூலை 06 வியாழக்கிழமை

பாதுகாப்பைக் காவு கொடுப்பதா ?

இந்தியாவின் பாதுகாப்பைக் காவு கொடுக்கும் வகையில் மோடி அரசு அமெரிக்காவுடன் பல ஒப்பந்தங்களை மேற்கொண்டிருக்கிறது. அதில் ஒன்று சென்னையை அமெரிக்காவின் ராணுவ தளமாகப் பயன்படுத்தும் ஆபத்தை உள்ளடக்கியிருக்கிறது. இதனை அனைத்து ஜனநாயக இயக்கங்களும் இணைந்து எதிர்த்திட வேண்டும்.

அண்மையில் அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி அமெரிக்க அரசு

அண்மையில் அமெரிக்கா சென்ற பிரதமர் மோடி அமெரிக்க அரசுடன் பல்வேறு ஒப்பந் தங்களில் கையெழுத்திட்டார். அதில் பாதுகாப்பு தொடர்புடைய ஓர் ஒப்பந்தமும் போடப்பட்டிருக்கிறது. அதில் அமெரிக்கக் கடற்படை சென்னை காட்டுப்பள்ளியில் உள்ள லார்சன் அண்ட் டுப்ரோ (எல் & டி) கப்பல் கட்டும் தளத்து டன் கப்பல் பழுதுபார்ப்பு ஒப்பந்தம் போட்டிருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்களை இந்தியாவிற்குள் அனுமதிப்பதுடன், நிலையான செயல்பாடுகளை உருவாக்கும் என அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

சென்னை மட்டுமின்றி மும்பையில் மசாகான் டாக் லிமிடெட், கோவாவில் கோவா கப்பல் கட்டும் தளம் ஆகியவற்றுடன் ஒப்பந்தங்களை இறுதி செய்யும் நிலையில் இருக்கிறது. இது இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கான ஒப்பந்தம் மட்டுமல்ல; அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் நாடுகளிடை யேயான குவாட் ராணுவ கூட்டமைப்பு செயல் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

அமெரிக்காவின் பேச்சைக்கேட்டு சீனாவைக் குறிவைத்து சென்னையில் அமெரிக்க கப்பல்தளம் என்பது மாறிவரும் சூழலில் புவிசார் அரசியலில் தமிழ்நாடு ஒரு மையப்புள்ளியாக மாறுவதற்கான ஆபத்தை உருவாக்கும். அது தமிழகத்தின் அமைதியான வளர்ச்சிக்கு ஊறுவிளைவிப்பதாக அமையும். மேலும் இந்த ஒப்பந்தம் வங்கக் கடலை அமெரிக்காவின் கட்டுக்குள் கொண்டு வரும் வாய்ப்பையும் வழங்க வழிவகுக்கும். இது அண்டை நாடுகளுடனான நட்புற விற்குப் பதிலாகப் பகை உணர்வையே அதிகரிக்கும். அமெரிக்காவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்கு இந்தியா இரையாகக்கூடாது.

இந்தியாவின் அயல் துறை கொள்கையை மோடி அரசு தலைகீழாக மாற்றி வருகிறது. நாட்டின் அயல் துறை கொள்கையை, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் முற்றிலுமாக அமெரிக்காவின் பூகோள அரசியல் நலன்களுடன் ஒத்துப்போகக்கூடிய விதத்தில் மாற்றி அமைத்திருக்கிறது.

இந்திய அரசு இதுவரை கடைப்பிடித்து வந்த அணிசேராக் கொள்கையைச் சிதைத்திருக்கிறது மோடி அரசு. அமைதிக்கான கொள்கையைப் புறந்தள்ளிவிட்டு முரண்களை அதிகரித்து, அண்டை நாடுகளுடன் பகைமையை வளர்த்து வருகிறது. இது தேசத்தின் வளர்ச்சிக்கும், அமைதிக்கும் குந்தகத்தையே ஏற்படுத்தும்.

இவ்வாறு அந்த தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் - கே.ஆர்.முருகேசன் புதல்வி மணவிழா!

அமைச்சர் பெருமக்கள் - எம்.பி. - எம்.எல்.ஏ.க்கள் வாழ்த்துரை!

புதுக்கோட்டை, ஜூலை 8 .

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம், சத்திரம் ரெ.கருப்பையா (தங்கம்) - காந்திமதி ஆகியோரின் மகன் வழிப் பேத்தியும், வீர.கோவிந்தன் - அழகம்மாள் ஆகியோரின் மகள் வழிப் பேத்தியும், திருவனந்த புரம் கே.ஆர்.முருகேசன் -சந்திரா ஆகியோரின் புதல்வியுமான டாக்டர் பிரியங்காவுக்கும்

அரியலூர் மாவட்டம், நல்லாம்பித்தை மூக்கப்பன் - மாரியாயி ஆகியோரின் மகன்வழிப் பேரனும், பி. கலியமூர்த்தி - மதுரம் ஆகியோரின் மகள்வழிப் பேரனும் மூ.கந்தசாமி - மணிமேகலை ஆகியோரின் புதல்வருமான டாக்டர்

கே.ஸ்ரீராமுக்கும் மண விழா நாளை (09.07.2023 - ஞாயிறு) காலை 7 மணியளவில் புதுக் கோட்டை - மாலையீடு கற்பக விநாயகர் மஹால் திருமண மண்டபத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் நடைபெறுகிறது.

அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ். சிவசங்கர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னாள் மத்திய இணை அமைச்சர் க.வேங்கடபதி, கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் எஸ்.பூச்சி முருகன், இரா. கிரிராஜன் எம்.பி., வை. முத்து ராஜா எம்.எல்.ஏ. இரா. பரந்தாமன் எம். எல்.ஏ. சின்னதுரை எம். எல்.ஏ. உள்பட அமைச்சர் பெருமக்கள்- நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள் இம்மணவிழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பிரதமராவதற்கு தகுதியில்லாதவர் மோடி

'தமிழ்நாட்டில் பா.ஜ.க.ன்னு ஒரு கட்சி இருக்கா'?

பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கேள்வி!

சென்னை, ஜூலை 8 -

தமிழகத்தில் பா.ஜ.க. என்ற கட்சி இருக்கா? என்றும் அண்ணாமலை யார்? என்றும் கேள்வி எழுப்பிய பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி பிரதமர் மோடியையும் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தமிழகத்தில் பா.ஜ.க. என்ற கட்சி இருக்கிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், பிரதமர் மோடிக்கு உலகத்தைச் சுற்றிவருவதில் தான் அக்கறை இருக்கிறது, வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இல்லை என்று கூறியுள்ளார்.

"பிரதமர் மோடியின் செல்வாக்கு குறைந்து வருகிறது என்பது கர்நாடகாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றதில் இருந்தே தெரிகிறது. பிரதமர் மோடி சும்மா அது பண்ண வேண்டும், இது பண்ண வேண்டும் என்று பேசிக்கொண்டிருக்கிறார்" என்று விமர்சித்த சுப்பிரமணியன் சுவாமி, ஜனநாயக நாட்டில் யார் யாரை வேண்டுமானாலும் விமர்சிக்கலாம் என்றும் கூறினார்.

பின்னர், தமிழகத்தில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலையின் செயல்பாடு பற்றி கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, பதில் சொன்ன சுப்பிரமணியன் சுவாமி, "அண்ணாமலை யாரு? தமிழ்நாட்டில் பா.ஜ.க. இருக்கா? எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. தமிழ்நாட்டில் நான் பா.ஜ.க.வை பார்த்ததே கிடையாது" என்றும் தெரிவித்தார்.

மாவட்ட பொறுப்பு அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்பு!

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் நா.கார்த்திக் - தொ.அ.ரவி, தளபதி முருகேசன் அறிவிப்பு!

கோவை, ஜூலை 8 -

ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக செயற்குழுக்கூட்டம் கோயமுத்தூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர் வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் பங்கேற்கிறார் என்று கோவை மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்ட செயலாளர் தொ.அ .ரவி, கோவை தெற்கு மாவட்ட செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாளை 08-07-2023 சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில், கோவை சிங்காநல்லூர் , வரதராஜபுரம் சாய் விவாஹா மஹாலில், கோயமுத்தூர் மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர் வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் தலைமையில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், பொதுக் குழு உறுப்பினர்கள் , நகரக் கழக, பகுதிக்கழக, ஒன்றியக்கழக, பேரூர்க்கழகச் செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், பேரூராட்சி தலைவர் கள் , நிலைக் குழு தலைவர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

பொருள்: கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

38 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆம்பூர் ஆர். சம்பங்கி

(முன்னாள் எம்.எல்.ஏ.,
முன்னாள் நகர சபைத் தலைவர்)

வணங்குகிறோம், வாழ்த்திடுங்கள்!

தர்மமே, எங்கள் தந்தையே,
அண்ணாவின் அடிச்சுவட்டை வாழ்வில்
உன் வழியாய்க் கொண்டவரே,
பொன் கழகம் புவி சிறக்க – கலைஞர்
புனிதரோடிணைந்தவரே
விண் உதிக்கும் சூரியனாய் – கொள்கை
உயிர் முழக்கம் செய்தவரே
கண்மூடும் நாள் வரைக்கும் – கழகக்
கண்மணியாய் இருந்தவரே
துன்பங்கள் சூழுகையில் – அதனை
துச்சமென உமிழ்ந்தவரே
இன்று வானிலிருந்து வாழ்த்து மழை – எங்கள்
இதயத்தில் பொழிபவரே
என்றும் நல்வழியில் நாம் நடத்தும் கழகம்
காத்திட வாழ்த்திடுங்கள்

மகன்கள் : (லேட்) ஆர்.எஸ்.மனோகர் குடும்பத்தினர்
ஆர்.எஸ். ஆனந்தன் எக்ஸ் எம்.சி.,
திருப்பத்தூர் மாவட்டக் கழக அவைத் தலைவர்,
ஆர்.எஸ்.ராஜு பி.காம்.,
மகள் : ஆர்.எஸ்.சாந்தி மற்றும் மருமகள்கள், மருமகன்
பேரன், பேத்திகள், குடும்பத்தினர்.

57 பயனாளிகளுக்கு ரூ.38.22 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்!

கிருஷ்ணகிரியில் 29வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி!

தே. மதியழகன் எம்.எல்.ஏ. - ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தனர்!

கிருஷ்ணகிரி, ஜூலை 6:

கிருஷ்ணகிரியில் 29வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி துவங்கப்பட்டது. இதில் 57 பயனாளிகளுக்கு ரூ.38.22 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை 29வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி துவக்க விழா நடந்தது. இந்த விழாவிற்கு மாவட்ட கலெக்டர் சரயு தலைமை வகித்து, கண்காட்சியினை துவக்கி வைத்தார். பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் பூபதி வரவேற்புரையாற்றினார். இதில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஒசூர் பிரகாஷ், தளி ராமச்சந்திரன், மாவட்ட எஸ்பி சரோஜ்குமார் தாக்கூர், கூடுதல் ஆட்சியர் வந்தனா கார்க், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், கிருஷ்ணகிரி நகர்மன்ற தலைவர் பரிதா நவாப், வேளாண்மை இணை இயக்குநர் (பொ) டேவிட்டென்னிசன், நகர்மன்ற துணைத் தலைவர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, துணை ஆட்சியர் (பயிற்சி) தாட்சாயிணி, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ரஜினிசெல்வம், நாகோஜனஅள்ளி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர். இந்நிகழ்ச்சியில், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் முருகன், நரசிம்மன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம்.வெங்கடேசன் , பொருளாளர் கதிரவன் , பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் , கிருஷ்ணகிரி நகரக் கழக செயலாளர் நவாப் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். முடிவில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேஸ்வரி நன்றி கூறினார்.

இந்த விழாவின்போது, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத் துறை, நீர்வடிப்பகுதித் துறை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 57 பயனாளிகளுக்கு ரூ.38 லட்சத்து 21 ஆயிரத்து 640 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

இந்த கண்காட்சியில், கிருஷ்ணகிரி மாவட்டம் மட்டுமின்றி, அண்டைய மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள், ஆந்திரா, கர்நாடகா மற்றும் வடமாநிலங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் தாய்லாந்து நாட்டை சேர்ந்த விவசாயிகள், தங்கள் தோட்டங்களில் விளைந்த மாங்காய்களை காட்சிப்படுத்தியிருந்தனர். அதன்படி, ஏற்றுமதிக்கு உகந்த ரகங்களான அல்போன்சா, தோத்தாபுரி, பங்கனப்பள்ளி, செந்தூரா, இமாம்பசந்த், மல்கோவா, நீலம், மல்லிகா மற்றும் பையூர்&1, சிந்து, பஞ்சவர்ணம், கெத்தாமர், நீலகோவா, பீத்தர், ஆஸ்டின், ரத்னா, ருமானி, சேலம் பெங்களூரா, பெங்களூரா, மல்லிகா, நாட்டி என 172 ரக மாங்காய்களை காட்சிப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், பார்வையாளர்களை கவரும் வகையில் ஏலக்காய், கிராம்பூ, மிளகு, வெந்தயம், சோம்பு, பட்டாணி, ஜாதிக்காய், அன்னாசி பூ, ஜாதிகொட்டய், மிளகாய் விதைகள், கककसा போன்ற 14 வகையான நறுமண பொருட்களை கொண்டு யானை மாதிரியையும், பல்வேறு பூக்களை கொண்டு வண்ணத்துப்பூச்சி, ஒசூர் சந்திரசூடேஸ்வரர் கோயில் தேர் மாதிரி, செல்பி புகைப்படம் எடுக்கும் மையம் ஆகியவற்றை அமைத்திருந்தனர். இதன் முன்பு நின்று ஏராளமானோர் புகைப்படம் எடுத்துகொண்டனர். மேலும், இந்த கண்காட்சியினை காண கோவை தோட்டக்கலைத்துறை கல்லூரி மாணவிகள் வந்திருந்து, ஒவ்வொரு அரங்கிற்கும் சென்று பார்வையிட்டனர்.